**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP 36 /2023**

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வினோத் (எ) வரதராஜன் | த/பெ.: | வடிவேல் |
| கிராமம்: | செட்டியமூலை | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | டைல்ஸ் வேலை |
| வயது: | 31 | முகவரி: | செட்டியமூலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 05.12.2024

**முதல் விசாரணை:_**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 27.09.2018 | முதல் தகவல் அறிக்கை | கணிணி நகல் |
| ம.சா.ஆ.2 | 26.09.2018 முதல் 18.10.2018 | டிச்சார் சம்மரி | நகல் |
| ம.சா.ஆ.3 | 27.09.2018 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.4 | 28.11.2017 முதல் 27.11.2018 | 1ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீடு சான்று | நகல் |
| ம.சா.ஆ.5 | 25.01.1994 | 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ.6 | 16.03.2015 முதல் 15.03.2020 | லாரியின் நேஷனல் பர்மீட் | நகல் |

மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**<u>2ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எனது வயது, தொழில் மற்றும் வருமானம் குறித்து ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் விபத்து தேதியில் இருசக்கர வாகனத்தின் பின்புறமாக அமர்ந்து சென்றேன். இருசக்கர வாகன ஓட்டுநரின் உரிமம் மற்றும் காப்பீடு நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார் நான் கொடுக்கவில்லை. புகாரில் லாரியை முந்தி செல்ல முயன்ற போது பின்னால் வந்த லாரியானது நான் சென்ற இருசக்கர மோட்டார் சைக்கிள் மீது மோதியது. 1ம் எதிர்மனுதாரர் கவனமாகதான் ஓட்டிசென்றார் என்றும், நாங்கள் சென்ற மோட்டார் சைக்கிள்தான் கவனக்குறைவால் ஓட்டி சென்றால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் சென்ற மோட்டார் சைக்கிள் ஓட்டுநரின் பங்களிப்பு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான விபத்து பதிவேடு நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டிச்சார்ஜ் சம்மரியின் அசலை தாக்கல் செய்யவில்லை நகலை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்ததால் எனக்கு எந்தவித பாதிப்பு இயலாமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் காரணம் அல்ல என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகை

அதிகமாக கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.